Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 66 அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது சங்.148:5 ஜூன் 2020 No.6

தேவனுடைய வார்த்தை ஒரு பட்டயமாயிருக்கிறது

The word is a Sword

Charles H. Spurgeon

"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" எபி.4:12.

தேவனுடைய வார்த்தை ஜீவனுள்ளது. அதாவது வேதபுத்தகம் ஜீவனுள்ள புத்தகம். இந்த இரகசியத்தை தேவ ஆவியால் உயர்ப்பிக்கப்பட்டு ஜீவன் பெற்ற மனிதர் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். வேறு எந்த புத்தகத்திலும் பரலோக ஜீவன் இருப்பதில்லை. வேதபுத்தகத்தை வாசிக்கிறவர்களுக்கு அது ஜீவனை அளிப்பதோடு, அற்புதங்களையும் செய்கிறது. இது அழியாத ஜீவ விதை. இது மக்களில் உறவாடி அவர்களைத் தூண்டி ஜீவவார்த்தையாக செயல்படுகிறது.

வேதபுத்தகம் என்னோடு போராடியிருக்கிறது. அது என்னை அடிக்கவும் அரவணைக்கவும் செய்திருக்கிறது. என்னைப் பார்த்து புன்னகைத்ததும், கோபமாகப் பார்த்ததுமுண்டு. அது என் இருதயத்தை அனல்படுத்தவும், என்னோடு கண்ணீர்விடவும், சந்தோஷப்படவும் கூடியது. அது என் பாதைகளை மட்டுப்படுத்தி என் போக்கையும் வரத்தையும் கண்காணிக்கிறது. எனக்கு ஒரு சிறந்த வாலிப தோழனாகவும், காலை மாலை வேளைகளில் சிறந்த போதகனுமாயிருக்கிறது. இதன் அனைத்துப் பக்கங்களும் வல்லமையாலும் ஜீவனாலும் நிரம்பியிருப்பதால் தேவபிள்ளைகளுக்கு இதை விட மேலான புத்தகம் ஒன்றுமில்லை.

தேவவசனம் எப்போதும் புத்தம் புதியதாகவும் வல்லமை நிறைந்ததாகவுமிருக்கிறது. "மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப் போலவும் இருக்கிறது. புல் உலர்ந்து அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" 1 பேது. 1:24-25. இதன் வல்லமை வாசிப்பவர்கள் மரித்த நிலையிலிருந்தாலும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். வேத வசனத்துக்கு நீங்கள் ஜீவனளிக்க வேண்டியதில்லை, அதிலிருந்து நீங்கள் ஜீவன் பெறலாம். 'லாசருவே வெளியே வா' என்று இயேசு கூறியதும் அவன் உயிர்பெற்று வெளியே வந்தது போல வசனம் நம்மை விழிப்படையச் செய்யும். நமது ஆத்துமா சோர்ந்து போயிருக்கும் நிலையில் தேவ ஆவியானவரால் இருதயத்தில் பதிக்கப்பட்ட ஒரு வார்த்தை நம்மை உயிர்ப்பித்த துண்டே!

சிலவேளைகளில் மரித்துவிட்டது போன்ற ஒரு உணர்வு எனக்கு ஏற்படுவதுண்டு. தேவனுடைய வார்த்தை மரிப்பதில்லை. எலிசாவின் கல்லறையில் இடப்பட்ட மரித்த மனிதனின் உடல் அவன் எலும்புகளில் பட்டவுடன் உயிர்பெற்றதுபோல ஆயரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் எழுதப்பட்ட ஜீவ வார்த்தை என்னை உயிர்பெறச் செய்ததுண்டு 2 ராஜா.13:12.

தேவ வசனம் நம்மில் நிலையாகத் தங்கியிருந்து எந்த சூழலிலும் செயல்படக்கூடியது. ஜீவனாலும் வல்லமையாலும் அது வளர்ந்து தேவ மகிமைக்கேற்ற கனிகளைத் தருகிறது. தேவன் ஜீவிக்கிறவர். அவரது வசனமும் ஜீவிக்கிறது. அதற்காக அவரைத் துதிப்போம். அழிக்க முடியாத சுவிசேஷம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. அது உயிரோடிருந்து என்றென்றைக்கும் பிரகாசிக்கக்கூடியது.

தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது

'வல்லமையுள்ளது' என்பதை சுறுசுறுப்பாக கிரியை செய்யக்கூடியது, சக்தி வாய்ந்தது, மிகுந்த பயனுள்ளது என்றெல்லாம் விளக்கலாம். தேவ வசனம் மேன்மையானது. அது தேவனல்ல, ஆனால் அது தேவனுடைய குரல். அதை நாம் கேட்க வேண்டும்.

தேவ வசனத்தை படிக்கவும், அறிவிக்கவும் அழைக்கப்படுவது கனமானது. உங்கள் பிரசங்கம் நன்றாக ஆயத்தம் செய்யப்பட்டு அதை நீங்கள் மிக அழகாகவும், சரளமாகவும் பிரசங்கிக்கலாம். ஆனால் அதனுடைய வல்லமை உங்கள் வார்த்தையில் இருப்பதில்லை. உங்கள் வியாக்கியானத்திலும் இருப்பதில்லை. தேவனுடைய வார்த்தையோ ஆத்துமாக்களை இரட்சிக்கவும், அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு உணர்த்தவும் வல்லமையுடையது. ஆத்துமாவை பாவ உணர்வடையச் செய்து சுவிசேஷத்தின் சுயாதீனத்திற்கு கொண்டு வரக்கூடிய வல்லமை அதிலுண்டு. மக்கள் சாத்தானால் சிறை பிடிக்கப்பட்டுவிட்டதையும் அவர்களை விடுவிக்க நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் நாம் அறிவோம். நம்மால் அது கூடவில்லை. தேவ வசனம் இரும்புக் கதவுகளை உடைத்து அதின் தாழ்ப்பாள்களைத் திறக்கக்கூடியது. சந்தேகம் என்னும் மாளிகைக்குள் அடைபட்டிருக்கும் ஆத்துமாவை தேவனுடைய வார்த்தையாகிய திறவுகோல் திறந்துவிடும்.

தேவ வசனம் நம்மை உற்சாகப் படுத்தவும், விசாலப்படுத்தவும் கூடியது. நமக்கு ஆறுதலளிக்கும் ஆச்சரியமான வல்லமை அதிலுண்டு. அது முதலாவது கிறிஸ்துவை நமக்குக் கொண்டு வந்த சுவிசேஷம், தொடர்ந்து அவரையே நோக்கி அவரைப் போலாகும் வரைக்கும் அது நம்மை நடத்தும். ஆண்டவர்தாமே தமது வார்த்தையின் வல்லமையால் நாம் அவரது சித்தத்தின்படி நற்கிரியைகளைச் செய்து கனிகொடுக்கிறவர்களாக மாற்றுவாராக. அவர் நம்மைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்குகிறவர் எபேசி.5:26.

நமது தனிப்பட்ட வாழ்விலும் வசனம் நம்மை உயிர்ப்பிக்கும் வல்லமையுடையது. பிறரை ஆசீர்வதிக்கவும் இதை பயன்படுத்த வேண்டும். பாடுகள் நிறைந்த இவ்வுலகில் நாம் நன்மை செய்ய சிறந்த ஆயுதம் வேண்டும். அதற்காக ஜீவனுள்ளதும் பழமையானதுமான சுவிசேஷத்தை எடுத்துக் கொள்வோம். மனித இயற்கையின் பாவத்தையும் மரணத்தையும் சந்திக்கப் போதுமான வல்லமை அதற்குண்டு. லிவியாதானுடைய கடினமான செதில்களை ஊடுருவிச் செல்ல வேறு எந்த உபாயமும் இல்லை. தேவனுடைய வார்த்தை இரும்பைவிட உறுதியுடன் அதன் தோலை ஊடுருவிச் செல்லும்.

ஆதியிலே பூமி இருள் நிறைந்திருந்த போது தேவன் 'வெளிச்சம் உண்டாகக்கடவது' என்றார். அந்த வார்த்தையால் வெளிச்சம் உண்டாயிற்று. அவரது வார்த்தை ஜீவன் நிறைந்தது. அது வல்லமையாக மக்களின் வாழ்விலும் இருதயங்களிலும் செயல்படுகிறது. அது புகழப்படத்தக்கதும் நாம் அன்பு கூரக்கூடியதுமாகும்.

ஊடுருவக் குத்துகிறதும் வகையறுக்கிறதும்

தேவ வசனம் ஊடுருவிப் பாய்ந்து இயற்கையானதையும் ஆவிக்குரியதையும் மற்றும் மாம்சத்திற்குரியதையும் தெய்வீகத்துக்குரியதையும் கூறுபடுத்துகிறது. அது மனிதத்துவத்தின் ஊனுக்குள் சென்று ஆத்துமாவின் இரகசிய நினைவுகளைக் கண்டறிகிறது. 'இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும்

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

இம்மாத பொன்னான சிந்தனை

குப்பை மட்டுமே

அருமையான தேவ பிள்ளையே, "குப்பை மட்டுமே" என்கிற இந்த பதத்தை நீ அதிகமாய் நேசிக்கிற உடமைகள், உனது அழகிய வீடு, கார், ஆபரணங்கள், வங்கி புத்தகம் மற்றும் விலையுயர்ந்தது என்று கணித்து பெட்டகங்களில் சேமித்து வைத்திருக்கிற யாவற்றின் மீதும் எழுதிவிடு. இன்று மிக மேன்மையாக காணப்படுகிற யாவும் "குப்பை மட்டுமே" என்பதை நீ நித்தியத்திற்கு கடந்து செல்லுகையில் காண்பாய்.

நீ சேமித்த யாவும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷப் பணிக்கு செலவிடப்படாவிடில் அது குப்பை மட்டுமே. மாத்திரமல்ல, இரவு பகலாய் கண்விழித்து உழைத்து எந்த வழியில் பணத்தை சேர்க்கலாம், சொத்து சுகங்களை வாங்கலாம் என அலைந்து திரியும் பிரிய ஆத்துமாவே, நீ சம்பாதித்தவைகள் தேவ பணிக்கென செலவிடப்படாத பட்சத்தில் யாது பயன்? நித்தியத்தில் என்ன பயனுண்டு? எனவே, உனது பிரயாசங்கள் மீது "குப்பை மட்டுமே" என எழுதிவிடலாமல்லவா?

வாக்குத்தத்தம்

நீங்கள் காற்றையும் காணமாட்டீர்கள், மழையையும் காண மாட்டீர்கள்; ஆனாலும் நீங்களும் உங்கள் ஆடுமாடுகளும் உங்கள் மிருக ஜீவன்களும் குடிக்கும்படிக்கு, இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப் படும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இது கர்த்தரின் பார்வைக்கு அற்பகாரியம்; 2 இராஜா.3:17,18

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2020 ஜூன் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன். கடந்த மார்ச் மாதம் 3 தூதன் வாசகருடைய சாட்சியை வாசித்தீர்கள்; இம்மாதம் 3 பேருடைய சாட்சியை அடியேன் எழுதுகிறேன்.

1 இவர் நம்மைப்போல் பத்திரிகை ஒன்றினை நடத்துகிற நேர் முழங்கால் ஜெபவீரன். "**என் சுய தேசம் இயேசுவை காண வேண்டும்**" என்பது இவரது தரிசனம். மாதம் 6000 பத்திரிகைகளுக்கு மேலாக வெளியிட்டுக் கொண்டிருந்த வர், வருடந்தோறும் 1000 பத்திரிகைகள் கூடுதலாக அச்சிட்டவர், நம்மைப் போல் தபால் சலுகை இழந்த இவர், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பத்திரிகையை வெளியிடு கிறார். இந்த தேவ மனிதருடைய ஜனவரி - பெப்ரவரி மாத இதழ், மார்ச் மாதத்தில் என்னுடைய கரத்தில் கிடைத்தது. அதிலிருந்து ஒரு பாராவை மாத்திரம் கீழே அச்சிடுகிறேன் :

"சென்ற ஆண்டு நாம் செய்வோம் என்று ஆண்டவரிடம் ஒப்புக்கொடுத்த பல ஊழியங்களை நம்மால் செய்து நிறைவேற்ற முடியவில்லை. குறிப்பாக 12 மணி நேர உபவாசக் கூடுகைகளின் எண்ணிக்கை குறைந்து போயிற்று. சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான வறட்சி காரணமாக அங்கேயும் ஊழியம் தடைபட்டது. வேதனைக்குரிய காரியம் என்னவென்றால் சென்ற ஆண்டு ஒரு ஆலயத்தைக் கூட நம்மால் கட்ட முடியவில்லை. ஜம்மு காஷ்மீரில் நம்முடைய பணித்தளத்தில் ஆலயம் கட்ட ஒரு இடம் வாங்க திட்டமிட்டி ருந்தோம், முடியவில்லை. கடுமையான பொருளாதார நெருக்கத்தை சந்திக்க வேண்டியதாயிற்று. விசுவாசம் சோதிக்கப்படுவதாக இருந்தது. விசுவாச ஊழியம் என்றானே, இவனுடைய விசுவாசம் எப்படி நிலைநிற்கப் போகிறது என்கின்ற பலமான சோதனைகளை சந்திக்க வேண்டியதா யிற்று. இந்த சூழ்நிலை தொடருமேயானால் இனி எப்படி இந்த ஊழியத்தை நடத்த முடியும் என்கின்ற கேள்விகூட அடிமைக்கு ஏற்பட்டது. இந்த பயங்கரமான சூழ்நிலையில் என்னோடு இணைந்து ஜெபித்த என்னுடைய ஜெப பங்காளர் களுடைய ஜெபத்தை என்னால் மறக்க முடியவில்லை. இந்த புதிய ஆண்டில் கர்த்தர், சென்ற ஆண்டு தடைபட்ட அனைத்து ஊழியங்களையும் செய்கின்ற கிருபையினையும், பெலனை யும், பொருளாதாரத்தையும் தந்து நம்முடைய விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுவாராக"

*****

2 தமிழ்நாட்டிலிருந்து ஓரிஸா மாநிலத்தில் மிஷனெரி பணி செய்யும் ஒரு தேவ மனிதர், ஆரம்ப நாட்களில் இரண்டு மிஷனெரிகளை அனுப்பித் தாங்க இயலாத சூழ்நிலையிலும், தேவ கிருபையால் இன்றைக்கு 150 மிஷனெரிகளை ஓரிஸா மாநிலத்திற்கு அனுப்பியுள்ளார். இவர்களுக்கும் "தபால் சலுகை லைசன்ஸ்" அரசாங்கத்தால் புதுப்பிக்கப்படவில்லை. எனவே, **மாதந்தோறும் ஊழியத்தை தாங்குகிற மக்களுக்கு மாத்திரம்** "முன்னேற்ற பணியாளர்கள்" (Promotional Workers) மூலம் நேரில் பத்திரிகையை கொடுக்கிறார்கள். மற்ற வாசகருக்கு "மாதம் ஒரு மாவட்டம்" வீதம் சுழற்சி முறையில் தபாலில் அனுப்புகிறார்கள்.

*****

3 1955-ம் ஆண்டு முதல் வெளிவரும் வருகையின் தூதன் பத்திரிகையை, 1969-ம் ஆண்டு முதல் அச்சிடும் சிலாக்கியத்தை அடியேன் பெற்றுள்ளேன்.

எனது தகப்பனாரின் வயதின் காரணமாக 1991 முதல் உதவி ஆசிரியராக பணியாற்றி வந்தேன். 1991-க்கும் அநேக ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஒரு தேவனுடைய பிள்ளை வருகையின் தூதன் ஊழியத்திற்கு மாதந்தோறும் ரூபாய் 1100 காணிக்கை அனுப்பி வந்தார்.

2018-ம் ஆண்டு ஜூலை வரை மாதந்தோறும் இதே தொகையை அனுப்பிய அவர், சமீபத்தில் இறந்து போனதாக இவர் மனைவி மூலமாக கேள்விப்பட்டு துயருற்றேன்.

(8-ம் பக்கம் பார்க்க)

எழுப்புதலுக்காக இதய கதறல் 2020
Heart cry for Revival 2020

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	04.01.2020 1-வது சனி	NIMS Church Sundarapandiam
பெப்ரவரி	08.02.2020 2-வது சனி	Christian Assembly Mission Chennai
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்	19.09.2020 3-வது சனி	Jesus Cares Assembly Anna Nagar, Chennai
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம்.
ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.

கடிதங்கள், மணியாடர்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன், நியுபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.:2131010118439
United Bank of India, Mead Street, Nagercoil-1 IFSC Code : UTBI0NGLP05

உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1 IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1 IFSC Code : SYNB0006182

(1-ம் பக்க தொடர்ச்சி)

வகையறுக்கிறது'. வேத வசனத்தைப் போதிக்கிறவர்கள், 'மறைக்கப்பட்டவை களை' அவர் எப்படி வெளிப்படுத்து கிறார் என்று நாம் ஆச்சரியப்படக் காரணம், வேத வசனத்தின் தன்மை. வசனத்தின் மூலம் வெளிப் படுத்தப்படும் கிறிஸ்து எல்லாவற்றையும் காண்கிறார். "சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும் வெளியரங்கமு மாயிருக்கிறது" எபி.4:12.

வசனம் உங்கள் எண்ணங்களைப் பார்ப்பது மட்டுமல்ல, அவற்றை வகை யறுக்கிறது. 'இந்த எண்ணம் வீணானது, அல்லது இந்த எண்ணம் ஏற்புடையது', 'இந்த நினைவு சுயநலமானது அல்லது கிறிஸ்துவுக்கேற்றது' என நமது எண்ணங் கள் வகையறுக்கப்படுகின்றன.

செயல்முறை பாடங்கள்

1. **தேவ வசனத்தை அதிகமாக கனப்படுத்து வோம். அது நமக்கு எல்லாவற்றிலும் போது மானதாயிருப்பதால் அதைப் படிப்போம். அதை கனம் பண்ணி வலதுகரமாக பயன் படுத்துவோம்.**

2. **நாம் மரித்துப் போன உணர்வு (ஜெபத்தின் போது) ஏற்படுமானால் வேதவசனத்தை நெருங்குவோம். நீங்கள் அவரோடு பேசாத போது அவர் உங்களிடம் பேச அனுமதியுங்கள். நமது தியான நேரங்களில் பாதிநேரம் வேதத்தை ஆராய்வதிலும் அதாவது தேவன் நம்மோடு பேசுவதிலும் மீதமான பாதிநேரம் நாம் தேவனோடு ஜெபத்தின் மூலமாகப் பேசுவதாகவும் துதிப்பதாகவுமிருக்கட்டும்.**

3. **நமது கடமைகளில் நமது பெல வீனத்தை உணரும்போது தேவ வசனத்திற்கும் அதின் வல்லமைக்கும் நேராகத் திரும்புவோம். அது நமக்கு மிகச்சிறந்த வலிமை. நமது இயற்கை யான திறமைகள் நாம் பெற்றுக் கொண்ட அறிவின் வலிமை, நாம் சேர்த்துக் கொண்ட அனுபவங்களின் வலிமையாவும் வீண். எனவே தேவனுடைய வார்த்தையிலுள்ள வல்லமையை நாடுவோம். உடைந்து போகிற மண் பாண்டங்களாகிய நமது அற்ப பெலனை விட்டுவிட்டு சர்வ வல்லவரின் வற்றாத ஊற்றின் பெலனை நாடுவோம். அதைப் பருகுவோர் நடந்தாலும் சோர்ந்து போவதில்லை, ஓடினா லும் இளைப்படைவதில்லை.**

4. **இறுதியாக இருதய நினைவுகளை அது வகையறுப்பதால் வேத வசனமே நம்மை நியாயம் தீர்க்கட்டும். அது சரி என்று சொல் வதை சரியென்றும் தவறு என்று சொல்வதைத் தவறாகவும் ஒத்துக்கொள்வோம்.**

தேவனுடைய வார்த்தையைப் பற்றிக் கொள்வோம். அது உங்கள் முற்பிதாக்களின் சுவிசேஷம், இரத்த சாட்சிகளின் சுவிசேஷம் மற்றும் ஆண்ட வராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம். அதுவே உங்கள் சுவிசேஷமாயிருக் கட்டும். அதுவே உங்களை இரட்சித்து, உங்கள் மூலமாகப் பிறரையும் இரட்சித்து தேவ நாமம் மகிமையடையச் செய்வதாக.

தேவ வசனம் ஊடுருவிப் பாய்ந்து இயற்கை யானதையும் ஆவிக்குரியதையும் மற்றும் மாம்சத்திற்குரியதையும் தெய்வீகத்துக்குரிய தையும் கூறுபடுத்துகிறது.

தேவனுடைய வார்த்தை விலையேறப்பெற்றது

The preciousness of God's Word

Octavius Winslaw (1808-1878)

தேவனுடைய வார்த்தை விலை யேறப்பெற்றது என்பதற்கு விசுவாசியின் அனுபவம் சாட்சியாயிருக்கிறது. தேவனு டைய வார்த்தையின் மூலம் சத்தியத்தை அனுபவமாக்கி, சுவிசேஷத்தை விசு வாசித்து, கிறிஸ்துவை நேசிக்கும் விசுவாசிகள் "உம்முடைய வார்த்தைகள் என் நாவுக்கு எவ்வளவு இனிமை யானவைகள்! என் வாய்க்கு அவைகள் தேனிலும் மதுரமாயிருக்கும்" சங்.119:103 என்று கூறமுடியும். "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவை களை உட்கொண்டேன், உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது" எரே.15:16.

தேவனுடைய வார்த்தை சத்தியம்: ஒரு விசுவாசிக்கு தேவனுடைய வார்த்தை சத்தியம். அது தெய்வீகமானதும், முத்திரையிடப்பட்டதுமாகும். இது அனுபவத்திலுள்ள சத்தியம். 'அவரே சத்தியம்' யோவா.14:6. 'உமது வசனம் சத்தியம்' யோவா 17:17 எனக் கூறி உறுதிப்படுத்தப்பட்ட சத்தியம்.

அவர் சத்தியமாக இருப்பதால் அவருடைய தன்மை அதில் காணப் படுவது உறுதி. தேவனிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகள் அவர் யார் என்பதை விளக்குகின்றன. "அவர் கன்மலை, அவர் கிரியை உத்தமமானது, அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன், அவர் நீதியும் செம்மையுமானவர்" உபா.22:4. அவரது வார்த்தை சத்தியம். அது நித்தியமான அழிவில்லாத சத்தியம். அது இரட்சகரை வெளிப்படுத்துவதிலும், இரட்சிப்பை அறிவிப்பதிலும், வெளிப் படுத்தும் உபதேசங்களிலும், அழுத்திச் சொல்லும் கருத்துக்களிலும், அளிக்கும் வாக்குகளிலும், அறிவிக்கும் நம்பிக்கை யிலும், குற்றப்படுத்தும் பயமுறுத்தல் களிலும் முற்றிலும் சத்தியமானது.

தேவனுடைய வார்த்தை தெய்வீக சத்தியத்தின் மீது எதிர்காலம் முழுவதையும் ஒப்படைத்து விடுகிறவர் களுக்கு விலையேறப் பெற்றது. எனவே எந்த தடைகள் வந்தாலும் உங்கள் நம்பிக்கை சத்திய வார்த்தை மீதிருக் கட்டும். "கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத் திருக்கிறது" சங்.119:89. "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத் திருக்கும்" 1 பேதுரு 1:25. இரக்கத்தால் அவர் கூறியவைகளும், கோபத்தால் பேசியவைகளும், அன்பு வார்த்தைகளும் பயமுறுத்தல்களும், ஆணையிட்டவை களும், உடன்படிக்கையின் இரக்கங் களும், ஆறுதல்களும் யாவும் நிறை வேறுவது உறுதி.

தேவன் தம்மை மறுதலிக்க மாட்டார். அவர் சொன்ன வார்த்தையில் தவறுவதில்லை. குழந்தையானது தாயைப் பற்றிக் கொள்வது போல நாம் அவரது வார்த்தைகளைப் பற்றிக் கொள்ள வேண்டும். "என்னிடம் வருகிற வனை நான் புறம்பே தள்ளுவதில்லை" யோவா.6:37 என்று நமது இரட்சகர் விசுவாசிகளிடம் கூறியுள்ளார்.

வேதவாக்கியங்கள் இயேசுவைக் குறித்து சாட்சியிடுகின்றன

ஆரம்பத்திலிருந்து முடிவுவரை இயேசுக் கிறிஸ்துவின் வரலாற்றை சித்தரிப்பதில் வேதபுத்தகம் ஈடு இணை யற்றது. அதைச் சுற்றிலும் தீர்க்கதரிசனங் களும், பிற உண்மைகளும் சேகரிக்கப் பட்டுள்ளன. வாக்குத்தத்தங்கள், இயேசு வின் பிறப்பு, வளர்ப்பு, ஞானஸ்நானம், கீழ்ப்படிதல், பாடுமரணம், உயிர்த்தெழு தல், பரத்துக்கேறுதல், மறுபடியும் வருதல், நியாயத்தீர்ப்பு, மகிமையான நித்திய வாழ்வு போன்ற அனைத்தும் கோர்வையாக வேதபுத்தகத்தில் காட்சி யளிக்கின்றன.

ஆண்டவராகிய இயேசுவை அறிந்து கொள்வதே வேத புத்தகத்தைப் படிப்பதின் நோக்கமாயிருக்க வேண்டும். அது கிறிஸ்துவின் வாழ்க்கைச் சரித்திரம். அவரது அன்பு, செயல் ஆகியவற்றை இன்னும் அதிகமாக அறிந்துகொள்ளும் ஆசையுடன் படிக்க வேண்டும். பவுலைப் போல, "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக் காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" பிலி.3:8 என்பது போல நாமும் கூறவேண்டும். அது நமக்கு அனுபவமாகும்போது விலையேறப் பெற்றதாகவும், சத்தி யத்தை வெளிப்படுத்துவதாகவுமிருக்கும். இயேசுவின் வரலாற்று மகிமையையும், அவரது செயல்களையும் புகழ்ந்து, அவரை நேசிக்கவும், அவரது சத்தத்தை ஒவ்வொரு பக்கத்திலும் கேட்கவும் முடியும். ஒவ்வொரு பக்கமும் அவரது நாம மகிமையாலும், அழகின் பிரகாசத் தாலும் ஒளிருவதைக் காணலாம்.

வேத வாக்கியங்களை ஜெபத் தோடும், தாழ்மையோடும், தூய ஆவியின் வழிநடத்துதலோடும் இயேசு வை அதிகமாக அறிந்து கொள்ளப் படிக்கிறோமா? வேதபுத்தகத்தில் அவர் அல்பாவாகவும், ஓமேகாவாகவும், சாரமாகவும், இனிமையாகவும், மகிமை யாகவும் வெளிப்படுகிறார். அவரே விலையேறப்பெற்ற மூலைக்கல். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்.... என்னைக் குறித்து சாட்சி கொடுக் கிறவைகளும் அவைகளே" யோவா.5:39. மோசே அவரைக் குறித்து எழுதியிருக் கிறார். தாவீது பாடல்களைப் பாடினார். தீர்க்கர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தனர். சீஷர்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதினர். அப்போஸ்தலர் உபதேசங் களை விவரித்தனர். இரத்த சாட்சிகள் அவருக்காக மரித்தனர். இவர்களெல் லாரும் இயேசுவுக்கு சாட்சிகள்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

தத்துவங்கள், கருத்துக்கள், கண்டிப்பு, வாக்குத்தத்தம்

தத்துவங்கள் உள்ளத்திற்குப் போதனைகளையும், விசுவாசத்திற்கு உறுதியையும் அளிக்கின்றன. கிருபை என்ற மேலான தத்துவம் தேவாட்டுக் குட்டியின் மகிமையை உயர்த்துகிறது. தேவனுடைய அன்பு, கிருபை ஆகிய வை இரட்சிப்பின் மூலம் வெளிப் படுத்தப்படுகின்றன.

தேவ வசனத்திலுள்ள கருத்துக் கள் மிகவும் விலையேறப்பெற்றவை. நாம் தூய்மைப்டுத்தப்படவும், நிதானித்து அறியப்படவும், இருதயம் சுத்திகரிக்கப் பட்டு, வாழ்வு சத்தியத்தின் தூய்மையால் வடிவமைக்கப்படவும் விருப்பம் ஏற்படும். உலகத்தினின்று வேறுபட்டு வாழவேண்டுமென்ற கருத்து, தேவனுக் கேற்காதவைகளை விட்டு விலகி, அனுதினமும் சிலுவை சுமந்து இயேசு வைப் பின்பற்றவும், அவரது உயிர்த் தெழுதலின் வாழ்வு மேலானவைகளை யே நாடவும் செய்கின்றன. இவை யெல்லாம் விசுவாசிக்கு விலையேறப் பெற்ற கருத்துக்கள்.

கடிந்துகொள்ளும் வசனங்களும் விசுவாசிக்கு ஏற்றவை. அவற்றின் மூலம் நமது பின்மாற்றங்கள், குறைகள் வெளிப் படுத்தப்பட்டு, பெருமை, சுயம் போன்ற வை விலக்கப்படுகின்றன. 2 தீமோ.3:16 படிக்க. சத்தியம் நம்மைக் கண்டித்து சீர்திருத்தும் போது வாக்குத்தத்தங் களைப் போல அவற்றையும் விலை யேறப்பெற்றவைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தெய்வீக ஆறுதல்

'சகலவித ஆறுதலின் தேவன்' என்று 2 கொரி.1:3-ல் படிக்கிறோம். சரீரத்திலோ, ஆவியிலோ, ஆத்துமாவி லோ நேரிடும் எந்த துக்கமும் வேதவசனத் தால் அகற்றப்படும். எனவே ரோமர் 15:4-ன்படி தேவ வசனத்தால் வரும் ஆறுதலால் நமக்கு நம்பிக்கையுண்டு. துக்கங்களில் அவர் நம்மை நிலைநிறுத்தி, வெளியே கொண்டுவந்து தமது நாமத் திற்குப் புகழையும் மகிமையையும் கொண்டுவருவார்.

தேவ வசனம் துன்புற்றோருக்கான புத்தகம்

"ஒருவனை அவன் தாய் தேற்று வது போல் நான் உங்களைத் தேற்று வேன்; நீங்கள் எருசலேமில் தேற்றப் படுவீர்கள்" ஏசா. 66:13 போன்ற வசனங்கள் வேத புத்தகமெங்கும் பரவிக் கிடக்கின்றன. வேத புத்தகத்தை தேவனு டைய இருதயத்தின் வாசல் (திறப்பு) என்று கூறலாம். அவரது இருதயத்தின் ஒவ்வொரு துடிப்பும், ஆவியில் எளிமை யானவர்களையும், ஆதரவற்றவர்களை யும், துன்புற்றோரையும், பாடு அனு பவிப்பவர்கள், துக்கப்படுவோர் போன்ற அனைவரையும் அழைத்து அடைக்கல மும், பரிவும், பாதுகாவலும், ஆறுதலும் அளிக்கிறது. துக்கம், பாரம், குழப்பம் ஆகியவற்றின் நடுவில் அது பாவத்தால் ஏற்பட்ட குற்ற உணர்வோ, சோதனை களின் அழுத்தமோ எதுவாயிருந்தாலும் தேவனால் கொடுக்கப்படும் ஆறுதலின் வார்த்தைகளை அதன் மூலம் பெறலாம்.

உயிர்ப்பிக்கும் வல்லமை

1 கொரி.2:4, 1 தெச.1:5 ஆகிய வசனங்களின்படி தேவ வசனத்திலுள்ள தெய்வீக வல்லமை ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது. நம்மை மறு உருவாக்குவதிலும் தூய்மைப்படுத்து வதிலும் ஒப்பற்றது வேதபுத்தகம். "அழிவுள்ள வித்தினாலல்ல, என்றென் றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தி னாலே மறுபடியும் ஜெனிப்பிக்கப் பட்டீர்களே" 1 பேதுரு 1:23. பரிசுத் தத்தை ஏற்படுத்துவதைக் குறித்து "உம்முடைய சத்தியத்தினாலே அவர் களைப் பரிசுத்தமாக்கும்" யோவா.17:17 என்று இயேசு ஜெபித்தார். சீஷரிடம், "நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத் தினாலே, நீங்கள் இப்பொழுதே சுத்தமா யிருக்கிறீர்கள்" யோவா.15:3 என்றும் கூறினார்.

ஆக தேவனுடைய வசனம் ஆவிக்குரிய வாழ்வுக்கும், பரிசுத்த வாழ் வுக்கும் நம்மை நடத்தும் கருவியாயிருப் பதால் அதை மிகுந்த கனத்துடனும் ஆழமான அன்புடனும் கருத்துடனும் நாம் படிக்க வேண்டும். கிறிஸ்துவைக் குறித்து இன்னும் அதிகமாக அறியவும், அவரது மீட்பின் செயல், உங்கள் அனைத்து தேவைகளையும் சந்திக்கும் அவரது இருதயம் ஆகிய வற்றை அறியும் படியாகவும் நாம் படிக்க வேண்டும். தேவனுடைய சித்தம், அன்பு ஆகியவற் றின் ஆழத்தை அறிய வேண்டும். சந்தேகங்கள், துக்கங்கள் யாவும் அதனி டம் எடுத்துச் செல்லப்பட வேண்டும். தேவ ஆவியானவர் சகல சத்தியத்திற் குள்ளும் உங்களை வழி நடத்துவாராக.

வேத புத்தகத்தின் போதனைகளின் ஒப்பற்ற தன்மை

The unique character of the Bible teaching

Arthur W. Pink 1886-1952

வேத வாக்கியங்கள் தெய்வீக ஏவுதலால் எழுதப்பட்டவைகள். இதன் ஒப்பற்ற தன்மைக்கு ஆதாரமாயிருப்பது இதற்கு ஆதாரமான ஒப்பற்ற தேவன். தேவன், மனிதன், உலகம், பாவம், நித்திய ஆக்கினை, இரட்சிப்பு, இயேசு கிறிஸ்து இவற்றைக் குறித்த விபரங்களை மனிதனோ, மனிதர்களோ எழுத முடியாது. அவை தேவனால் வெளிப் படுத்தப்பட்ட சத்தியம்.

தேவனைக் குறித்து

அவர் நித்தியமானவர் : "பர்வதங்கள் தோன்றுமுன்னும் நீர் பூமியையும், உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனா யிருக்கிறீர்" சங்.90:2.

அவர் அளவுக்கடங்காதவர் : "..... தேவன் பூமியில் வாசம் பண்ணுவாரோ? இதோ வானங்களும், வானாதி வானங்களும் உம்மைக் கொள்ளாதே!" 1 ராஜா.8:27.

அவர் சர்வாதிகாரமுடையவர் : "முந்தி பூர்வ காலத்தில் நடந்தவைகளை நினை யுங்கள். நானே தேவன், வேறொரு வரும் இல்லை. நானே தேவன். எனக்குச் சமான மில்லை. அந்தரத்திலுள்ளவைகளை, ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப் படாதவைகளைப் பூர்வ கால முதற் கொண்டும் அறிவிக்கிறேன். என் ஆலோ சனை நிலை நிற்கும். எனக்குச் சித்தமான வைகளையெல்லாம் செய்வேன்" ஏசா.46:10.

"இதோ நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர், என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" எரே.32:7.

அவர் மகா பெரியவர் : "நம்முடைய ஆண்டவர் பெரியவரும், மகா பெல முள்ளவருமாயிருக்கிறார். அவருடைய அறிவு அளவில்லாதது" சங்.147:5.

அவர் சர்வ வியாபி : "நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன்? தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். எவனாகிலும் நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ? என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் வானத்தையும் பூமியையும் நிரப்பு கிறவர் அல்லவோ? என்று கர்த்தர் சொல்லுகிறார்" எரே.23:24.

அவர் மாறாதவர் : "..... அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்று மையின் நிழலுமில்லை" யாக்.1:17 . "இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" எபி.13:8.

பூமியனைத்திற்கும் நியாயாதிபதி : "சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ?" ஆதி.18:25. "ஆதலால் நம்மில் ஒவ்வொரு வனும் தன்னைக் குறித்து தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டும்" ரோமர் 14:12.

அவர் விசாரிக்கிறவர் : "..... பிதாக்கள் செய்த அக்கிரமத்தை பிள்ளைகளி டத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்" எண்.14:18. "..... அப்பொழுது அந்தப் புஸ்தகங் களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத் தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" வெளி.20:12. "..... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" கலா.6:7.

அவர் முற்றிலும் பரிசுத்தமானவர் : "சேராபீன்கள் அவருக்கு முன்பாகத் தங்கள் முகத்தை மூடிக் கொள்கின்றன" ஏசா.6:2. "..... வானங்களும் அவர் பார்வைக்கு சுத்த மானவைகள் அல்ல" யோபு.15:15. அவருக்கு முன்பாகப் பரிசுத்தவான்கள், "நான் என்னை அருவருக்கிறேன்" யோபு.42:6, என்றும் 'ஐயோ நான் அதமா னேன்' ஏசா.6:5 என்றும் கதறியிருக் கிறார்கள்.

எந்த ஒரு மனிதனும் இத்தகைய ஒரு தேவனைக் கண்டறிந்ததில்லை. உலகிலுள்ள புத்தக சாலைகள், புறஜாதி களின் மார்க்கங்கள் எதுவும் நமது

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

தேவனோடு ஒப்பிடக்கூடிய ஒரு தேவனை விவரித்ததும் அறிந்ததுமில்லை. இப்படிப்பட்ட மேலான தேவனைப் பற்றிய விபரங்களை வேதபுத்தகம் நமக்கு அளிக்கிறது.

மனிதனைப் பற்றி

வேத புத்தகம் ஒன்றே மனிதனைக் கண்டித்து உணர்த்துகிற புத்தகம். அவனுடைய ஞானம், சாதனைகள் என்பவற்றை அது புகழுகிறதில்லை. மாறாக, 'எந்த மனுஷனும் மாயையே' சங்.39:5 எனக் குறிப்பிடுகிறது. மனிதன் உயர்வானவனென்றும், பரலோகம் செல்லுகிறான் என்று விவரிப்பதற்குப் பதிலாக அவனுடைய நீதியெல்லாம் அழுக்கான கந்தை என்றும் அவன் இழந்து போன பாவி என்பதால் நரகத்திற்குப் பாத்திரன் என்றும் எடுத்துக் கூறுகிறது.

மனிதனுடைய பரிதாபமான நிலையை ரோமர் 3:10-18 வசனங்களில் படியுங்கள்.

நாம் செய்யும் பாவங்களுக்கு சாத்தான் காரணமல்ல என்பதை மாற்கு 7:21-23 வசனங்களில் இப்படி படிக்கிறோம். "எப்படியெனில் மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காம விகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும். பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப் படுத்தும்". "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. அதை அறியத் தக்கவன் யார்?" எரே.17:9. மனிதனைக் குறித்த மேற்கூறிய சிந்தனைகள் மனித கருத்துக்களல்ல.

உலகத்தைக் குறித்து

மனிதன் உலகத்தைக் குறித்துப் பெருமையான எண்ணம் கொண்டு அது தனது உலகம் என்கிறான். தனது உழைப்பினால் தான் பெற்றுக் கொண்டது போன்ற திருப்தியும் பெருமையும் கொள்கிறான். உலகம் முன்னேறிக் கொண்டே வருகிறது என்று பெருமிதம் கொள்கிறான். "தேவன் வானத்திலிருக்கிறார். உலகத்தில் எல்லாம் நன்றாய் நடக்கிறது" என்று பாடுகிறான். ஆனால் வேதபுத்தகம் 'உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது' என்று தெரிவிக்கிறது.

"உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்..... நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும் உலகம் உங்களைப் பகைக்கிறது" யோவா.15:18-19. உலகம் கிறிஸ்துவையும் அவரைப் பின்பற்றுகிறவர்களையும் வெறுக்கிறது.

"இவ்வுலக ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது" 1 கொரி.3:19. மனிதன் இப்படி எழுத மாட்டான்.

"விபசாரரே, விபச்சாரிகளே உலக சினேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்கு சினேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாயிருக்கிறான்" யாக்.4:4.

"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள். ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. ஏனெனில், ... உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்" 1 யோவா.2:15-16.

உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது 1 யோவா.5:19. ஏன் உலகம் கிறிஸ்துவையும், அவரது சீஷரையும் வெறுக்கிறது என்பது தெளிவாகிறது. அது பழைய பாம்பாகிய பிசாசின் அதிகாரத்திற்குள் இருக்கிறது. பிசாசு இவ்வுலகத்தின் அதிபதி.

பாவத்தைக் குறித்து

வேதபுத்தகம் பாவத்தை மறைப்பதோ, அதன் விளைவுகளைக் குறைத்துக் கூறுவதோ இல்லை. ஆனால் அதன் கடுமை, பொல்லாப்பு ஆகியவற்றை விளக்கிக் காண்பிக்கிறது. ஆதி.18:20-ன் படி மிகவும் கொடியது. அவை தேவனுடைய கோபத்தைத் தூண்டுகின்றன 1 ராஜா.16:2. பாவத்தின் வஞ்சனை எபி.3:13-ல் குறிப்பிடப் பட்டுள்ளது. ரோமர் 7:13-ல் பாவம் கற் பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும் என்றும் சங்.51:4-ல் அனைத்து பாவமும் தேவனுக்கு விரோதமானதென்றும் அது கிறிஸ்துவுக்கு எதிரானது என்று 1 கொரி.8:12-லும் படிக்கிறோம். பாவம் 'சிவேரென்றிருந்தாலும்' என்றும் 'இரத்தாம்பரச் சிவப்பு' என்றும் ஏசா.1:18-ல் வாசிக்கிறோம். பாவம் நியாயப் பிரமாணத்தை மீறுகிறது 1 யோவா.3:4. அது அராஜகத்தையும், சர்வ வல்லவருக்கு எதிரான துணிந்த செயல் என்பதையும் காணமுடிகிறது. மேலும் அது ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மட்டும் உரியதல்ல, "எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி....." என்றும் "அந்தபடியே நீதிமான் ஒருவனும் இல்லை" ரோமர் 3:23,10 ஆகிய வசனங்கள் எடுத்துக்கூறுகின்றன.

வேதபுத்தகம் மட்டுமே மனிதனுடைய பாவத்தைக் குறித்து சுட்டிக் காட்டுகிறது. அது இத்தனை கொடியதாயிருந்தபடியால் தேவன் தமது ஏக குமாரனைப் பலியாகக் கொடுத்தார்.

நித்திய தண்டனையைக் குறித்து

இன்று பாவத்தின் கொடூரதன்மை குறைக்கப்பட்டு, அதற்குரிய தண்டனையும் இலகுவாக்கப்படும் முயற்சி எடுக்கப்படுகிறது. அனேகர் நித்திய ஆக்கினைக்கு எதிராகக் குரல் எழுப்புகின்றனர். குறுகிய காலம் வாழும் ஒரு மனிதனுக்கு நித்திய கால தண்டனை நியாயமற்றது என வாதாடுகின்றனர். இவ்வுலகில் சில நிமிடங்களில் ஒருவர் செய்யும் குற்றத்திற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படவில்லையா?

தேவன் பார்க்கும் விதமாகவே நாம் பாவத்தைப் பார்க்க வேண்டும் என்பதற்காக வேபுத்தகம் எழுதப் பட்டுள்ளது. ஒரே பாவத்திற்காக ஆதாமும் ஏவாளும் ஏதேனைவிட்டுத் துரத்தப் பட்டார்கள். கானானும் அவன் பின் சந்ததியும் ஒரே குற்றத்திற்காக சாபத்திற் குள்ளாயினர். கோராகும் அவன் கூட்டத் தினரும் செய்த ஒரே பாவத்தினால் உயிரோடே பூமியால் விழுங்கப் பட்டனர். ஒரே தவறினால் மோசே வாக்குத்தத்த நாட்டில் பிரவேசிக்க முடியாமற் போனது. ஆகான் செய்த ஒரே குற்றத்திற்காக அவனும் குடும்பத்தாரும் கல்லெறிந்து கொல்லப்பட்டனர். ஒரே பாவத்திற்காக எலிசாவின் வேலைக்காரன் கேயாசி குஷ்டரோகியானான். ஒரே பாவத்தால் அனனியாவும் சப்பீராளும் சடுதியாக விழுந்து மரித்தனர். தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்வது கொடிது என்பதனைக் காண்பிக்கவே இவை எழுதப்பட்டுள்ளன. ஆயினும் இன்று மக்கள் பாவத்தின் கொடூர விளைவை சிந்திக்கிறதில்லை. இக்கொடிய பாவம் பாவமற்ற தேவ குமாரனை அவமானச் சிலுவையில் மரிக்கச் செய்தது. பாவிகளுக்கு நித்திய ஆக்கினை நியாயமானதுதான்.

வேதவாக்கியங்களின் சரியான வெளிச்சம் பெறாத சில நாடுகளில் மரணத்திற்குப் பின் தற்கால பாடுகள் மூலம் பாவிகள் பரிசுத்தப்படுத்தப்படுவார்கள் என்ற ஒரு தப்பெண்ணம் இருந்து வருகிறது. பல நூற்றாண்டுகளாக சுவிசேஷத்தை அறிந்தவர்கள் கூட நித்திய ஆக்கினை உண்டென்பதை விசுவாசிக்கவில்லை இரக்கமுள்ள ஆண்டவர் எப்படி தனது சொந்த சிருஷ்டிகளை முடிவற்ற தண்டனைக்கு ஆளாக்குவார் என்பது அவர்களது வாதம். தூய ஆவியானவரால் வேத புத்தகம் எழுதப்படாமலிருந்தால் கிறிஸ்துவற்றவர்களாக மரிக்கிறவர்கள் நித்திய ஆக்கினை அடைவதைக் குறித்து குறிப்பிட்டிருக்க முடியாது. தேவனுடைய வசனம் பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டதாகும் 2 பேதுரு 1:21.

தேவனுடைய வார்த்தையின் படி கிறிஸ்துவைப் புறக்கணிக்கிறவர்கள் முடிவில்லாததும் விவரிக்க முடியாததுமான ஆக்கினையினை அடைவார்கள். அதைக் குறித்து "புழு சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்" மாற்கு.9:48; "அக்கினியும் கந்தகமுமான கடல்" வெளி.20:10; அங்கு தள்ளப்பட்டவர்களுக்கு ஒரு சொட்டு தண்ணீரும் கிடைப்பதில்லை லூக்கா.16:24-26 என்றெல்லாம் படிக்கிறோம். "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும். "..... இரவும் பகலும் இளைப்பாறுதல் இராது" வெளி.14:11. "இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கும்"

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

யூதா.13 என்ற வசனங்கள் நரகத்தின் கொடுமையை விளக்குகின்றன. இழந்து போனவர்களின் நிலை சகிக்க முடியாத தும் ஆனால் சகிக்க வேண்டிய கட்டாய மானதுமாயிருக்கிறது. மனிதனால் சிந்தித்துப் பார்க்க முடியாத பயங்கர மான இடம் நரகம்.

இரட்சிப்பைக் குறித்து

இரட்சிப்பைக் குறித்த மனித சிந்தனை அபூரணமானதும் குறையுள் ளதுமாகும். "துன்மார்க்கன் தன் வழியை யும், அக்கிரமக்காரன் தன் நினைவு களையும் விட்டுக் கர்த்தரிடத்தில் திரும்பக்கடவன்" ஏசா.55:7.

முதலாவதாக மனிதன் இரட்சிப்பின் தேவையை உணராதவன். தான் வாழும் சன்மார்க்க வாழ்வு போதும் என்ற திருப்தியுடன் இருக்கிறான். பாவத்தால் அந்தகாரப்பட்ட அவனது அறிவு இழந்து போன தனது நிலையை அ றி ய க் கூ ட ா ம லி ரு க் கி ற து . பரிசேயனைப் போல மற்றவர்களைக் காட்டிலும் தான் மேலானவன் என்ற எண்ணத்தோடு காணப்படுகிறான். தேவனுக்கு முன்பாகத் தான் குற்றவாளி என்ற தெளிவு அவனுக்கில்லை. தூய ஆவியானவர் செயல்படும் போதுதான் "தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று கதறுவான்.

இரண்டாவதாக இரட்சிப்பின் மார்க்கத்தைக் குறித்து அவன் அறிவற்ற வன். தேவனை சந்திக்க ஆயத்தமில்லா மல், இப்படியே மரித்தால் நித்திய காலமாகவே இழந்து போவான் என்று அறிவுறுத்தப்பட்டாலும் அவன் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. தேவனுடைய நீதியைக் குறித்து அறியா மல் தன் சொந்த நீதியை நிலைநிறுத்த முயற்சிக்கிறான். கடந்தகால பாவச் செயல்களை நிவிர்த்தி செய்ய தேவனைத் திருப்திப்படுத்தி பரலோகத்தைப் பெற லாம் என்பது அவனுடைய மனோ பாவனை. இரட்சிப்பு சம்பாதிக்கப்படக் கூடியது, கிரீடம் தனது வெற்றியின் பரிசு என்பது அவனது இருதய எண்ணம். மன்னிப்பும், ஜீவனும் இலவசமாயினும் அது உண்மையாயிருக்க முடியுமா? என்பது மனிதனின் கேள்வி. "கிருபை யினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு, ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" எபேசி.2:8,9. "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" தீத்து.3:5.

கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு வருகிறது என் பதை மனிதன் அறியாதிருந்தால், இரட் சிப்பின் தன்மையையும், இரட்சிக்கப் பட்டவர்களின் எதிர்காலத்தையும் அவன் அறிய முடியாது. சர்வத்தையும் படைத்து ஆளுகிற எஜமான் விழுந்து போன மனிதனை உளையான சேற்றி லிருந்து எடுத்துத் தன் சொந்த பிள்ளை யாக்கி, தம்மோடு உட்கார வைப்பதை அறிவானா?

வெட்கத்திற்கும், வெறுப்புக்கும் உரியவர்களாகிய மனிதர் ரோமர் 8:17-ன் படி 'தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்து வுடன் சுதந்தரரும்' ஆகலாம் என்பதை எண்ணிப்பார்ப்போம். எளியவர்கள் குப்பையிலிருந்து உயர்த்தப்பட்டு பரலோகில் கிறிஸ்துவுடன் உட்காருவது ஆச்சரியமல்லவா! கீழ்ப்படியாத ஆதாமின் சந்ததியார் தூதர்கள் வாசம் செய்யும் இடம் வரை உயர்த்தப் படுவது நிஜமாயிருக்க முடியுமா? ஒரு நாள் கிறிஸ்துவைப் போலாகி என்றென்றும் கர்த்தருடன் வாழுவோம் என்பதை எண்ணிப்பார்ப்போம். மிருக குண முள்ள மனுஷன் இதை அறியமாட்டான் 1 கொரி.2:9-10 படிக்க.

தேவன் நீதியுள்ளவராயினும் இரக்கமுள்ளவராகவும், இரக்கமுள்ள வராயினும் நீதியுள்ளவராகவும் விளங்க மனிதன் ஒரு வழியை ஏற்படுத்த முடி யாது. 'பணமுமின்றி விலையுமின்றி' கிடைக்கும் இரட்சிப்பை மனிதன் சொப் பனத்திலும் எதிர்பார்க்க முடியாது. தேவ குமாரன் பாவமாக்கப்பட்டதும், அவர் மரித்ததும் ஆகிய செயல்கள், நீதியற்றவர் களுக்காக நீதிமான் இயேசு செய்த செயல் என்பது சிந்தித்துப் பார்க்க முடியாதது.

இரட்சகரைக் குறித்து

இலக்கியங்களிலே ஒப்பில்லாத வேதபுத்தகம், இயேசுக் கிறிஸ்துவின் நபரத்துவம், குணாதிசயம், பணி ஆகிய வற்றை எடுத்துச் சொல்லுகிற இணை யற்ற இலக்கிய படைப்பு. இயேசுக் கிறிஸ்துவின் தன்மைகளை முற்றிலும் அறிய எவராலும் கூடாது. கலைஞர்கள் தங்கள் அழகிய கலை களால் அவரை உருவாக்கி வெளிப்படுத்த முடியாது. ஆனால் தூய ஆவியானவர் சுவிசேஷங் கள் மூலமாக அவரை நமக்கு சித்தரித்து அளித்திருக்கிறார்.

வேதபுத்தகத்தில் காணும் அனைத்து மக்களிலும் அவர் வித்தி யாசமானவர். நோவா உத்தமன். ஆபிரகாம் விசுவாசிகளின் தந்தை. ஈசாக்கு தந்தைக்குக் கீழ்ப்படிந்த மகன். யோசேப்பு சகோதர சினேகமுள்ளவன். மோசே சுயநலமற்றவனும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனுமாயிருந்தான். யோசுவா தைரியமிகுந்த தலைவன். யோபு மனதைரியமும் பொறுமை யுமுள்ளவன். தானியேல் தேவனுக்காக உறுதியாய் நின்ற ஜெபவீரன். பவுல் சுவிசேஷ பணியில் உற்சாகம் மிகுந்தவர். யோவான் ஆவிக்குரிய சிறந்த படியில் நின்றவர். ஆனால் ஆண்டவராகிய இயேசுவில் சகல கிருபைகளும் நிரம்பி வழிந்தன. அவர் சாந்த குணத்தோடு அரச தன்மையுடையவர், சாதுவாயினும் பயமற்றவர், பரிதாபமுடையவராயினும் நீதிசெய்கிறவர். அர்ப்பணிப்பிலும் அதிகாரமுடையவர். தேவகுமாரனா கிலும் மனுஷகுமாரனாய் வந்தவர். பாவமே இல்லாதவர் என்பது அவரது தனிசிறப்பு. அவர் ஒப்பற்றவர்.

அவரது சிறந்த தன்மைகளுக்கு ஒப்பிடக்கூடிய ஒருவரும் இல்லை. அவரது நபரத்துவம், பணி ஆகிய வற்றிலும் அவர் தனிச் சிறப்புடையவர். நமது சிருஷ்டி கர்த்தாவும், சர்வலோக அதிபதியுமாகிய அவர் அடிமையின் கோலமெடுத்து மனுவுருவானார். மகிமையின் ஆண்டவர் சத்திரத்தில் ஒரு முன்னணையில் பிறந்ததை சிந்தித்துப் பார்ப்போம். தூதர்களால் ஆராதிக்கப் பட்டவர், தரித்திரராக, தலைசாய்க்க இடமற்றவராக வாழ்ந்தது விந்தை யல்லவா! சேராபீன்கள் முகங்குப்புற விழுந்து பணிந்த அவர் நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானார், அவர் ஒப்பு உயர்வற்றவர்.

ஜார்ஜ் முல்லரின் விசுவாச வாழ்வு - பகுதி-3

***George Muller's Life of Trust** - Part-3*

1835-ல் முதல் காப்பகம் ஆரம்பித்தது முதல் *1845* வரை வில்ஸன் தெருவில் வாடகைக் கட்டிடங்களில் பணி தொடர்ந்தது. *1845*-ல் அத்தெரு வில் வாழ்ந்த ஒருவர் இத்தனை சிறுவர்கள் அந்த ஒரே தெருவில் வாழ்வது சில அயலகத்தாருக்கு அசௌகரியமாக இருப்பதாக மில்லரிடம் தயவாகக் கூறினார். மில்லர் அதிகமாக சிந்தித்து ஜெபித்தார். "ஆதலால் மனுஷர் உங்க ளுக்கு எவைகளைச் செய்ய விரும்பு கிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" மத்.7:12 என்ற வசனம் அவருடைய இருதயத்தில் தென்பட்டது. விளையாட்டு நேரங் களில் பிள்ளைகள் எழுப்பிய இரைச்சல் முல்லருக்கே கஷ்டமாயிருந்தது. காப்ப கத்தின் கழிவு நீரோடையும் அதிக அளவு பிரச்சனையாயிருந்தது.

விளையாடுவதற்கு இன்னும் அதிக இடமிருந்தால் நல்லது. தோட்ட வேலை செய்ய சிறுவர்களை பயன் படுத்த இப்போது போதுமான இட மில்லை. துணிகளை சலவை செய்ய சிறுமிகளுக்குக் கற்றுக்கொடுக்கவும் இட வசதி குறைவாயிருந்தது. பிள்ளைகள் வியாதிப்படும்போது அவர்களை படுக்க வைக்கத் தனி அறை இல்லை. மேலும் இன்னும் அதிகமான பிள்ளைகள் காப்ப கத்தில் சேர்க்கப்பட விருப்பத்தோடிருந் தும் இடநெருக்கடியினிமித்தம் அவர் களை சேர்க்கக்கூடாமலிருந்தது.

விசுவாசத்தில் இன்னொரு படி

எல்லாவற்றையும் சிந்தித்த முல்லர் புதிய கட்டிடங்களைக் கட்டும் முடிவுக்கு வந்தார். கூடுதலான பொருளாதாரத்தைத் தர ஆண்டவர் உண்மையுள்ளவரும் போதுமானவரும் என்று உணர்ந்தார். இப்போது காப்பகத் திலிருந்த பிள்ளைகளின் எண்ணிக்கை *130*. அவர் *300* ஆதரவற்ற பிள்ளைகளுக் கான கட்டிடம் கட்ட விரும்பினார்.

நிலத்திற்காகவும், கட்டிடத்திற் காகவும் *10000* பவுண்ட் செலவாகும்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

என்பது முல்லரின் கணக்கு. இதற்காக காலைதோறும் மனைவியோடு சேர்ந்து ஜெபிக்கத் தீர்மானித்தார். 35 நாட்கள் ஜெபித்தும் ஒரு பவுண்ட் கூட வரவில்லை. எனவே இந்தத் திட்டத்திற் காகப் போதிய விசுவாசமும், பொறுமை யும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென உணர்ந்தார்.

36-வது நாள் 1000 பவுண்ட் வந்தது, ஒரு கிறிஸ்தவ என்சினியர் இதற்கான வரைபடம் போன்றவற்றை வரைந்து கட்டிட வேலையையும் செலவின்றி கண்காணிக்க ஒப்புக் கொண்டார். முல்லர் விளம்பரங்களை விரும்பவில்லை. விசுவாசத்தோடும், பொறுமையோடும் தேவ செயலை எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோடு எளிய பணியாளனாகிய தன்னைக் கொண்டு தேவன் எல்லாவற்றையும் செய்ய விரும்பினார்.

அஷ்லே டௌன்

மூன்று மாதங்கள் ஜெபித்த பின் முல்லர் நிலம் வாங்க முயற்சித்தார். அஷ்லே டௌன் என்ற இடத்தில் நிலம் இருப்பதாகக் கேள்விப்பட்டார். நில உரிமையாளரைத் தேடிச் சென்றும் வீட்டிலும், அலுவலகத்திலும் அவரை சந்திக்க முடியவில்லை. மறுநாள் அவரை சந்தித்தபோது முந்தைய நாள் முல்லர் விட்டுச் சென்றிருந்த செய்தியைத் தாம் அறிந்து இரவு இரண்டு மணி நேரமாக நிலத்தை விற்பதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் ஏக்கருக்கு 200 பவுண்ட் விலை பெறுமான அந்த நிலத்தை ஏக்கருக்கு 120 பவுண்ட் விலையில் முல்லருக்குக் கொடுக்க தீர்மானித்திருப்பதாகவும் கூறினார்.

இப்போது முல்லர் அங்கு கட்டிடம் கட்டுவதற்கான பொருளா தாரத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந் தார். சுமார் 278 பிள்ளைகளுக்கான வேதபாட வகுப்புகள், பாடசாலை போன்றவற்றின் தேவைகளுக்காக அவர் ஜெபித்தார். அன்றியும் வேத புத்தகங்கள், புதிய ஏற்பாடுகள், சுவிசேஷ துண்டு பிரதிகள் போன்றவைகளும் வினி யோகிக்கப்பட வேண்டும். சுவிசேஷப் பணிகளுக்காக 595 பவுண்ட் செலவு பண்ண வேண்டும். காப்பகப் பிள்ளை களும் நன்கு பராமரிக்கப்பட வேண்டும். சில ஆதரவற்ற பிள்ளைகள் இரட்சிக்கப் பட்டு சபையில் சேர்க்கப்பட்டனர். சில பெரியவர்களும் சபையில் சேர்ந்தனர். இவ்வாறு செலவு கள் அதிகரித்தது. இந்த வேளையில் முல்லர் தம்பதிகளின் இளைய மகள் ஆண்டவராகிய இயேசு வை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டாள். அவளுக்காகப் பெற் றோர் 18 மாதங்கள் ஜெபித்துக் கொண்டிருந் தனர். இந்த செய்தி அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

தனது பணிகளுக்காகவும், அயல்நாட்டு மிஷனெறி பணிகளுக்காக வும் அதிகமான பொருளுதவி கிடைத்தது. ஊதியமில்லாதவர்களுக்கு உதவி செய்யஅவர் தூண்டப்பட்டார். மிஷனெறிகளின் தேவைகளும் ஏற்ற வேளைகளில் சந்திக்கப்பட்டன. அதிக தனவானாயிருந்த ஒருவர் தனது தனத்தையெல்லாம் மிஷனெறி பணிக் காகக் கொடுத்துவிட்டார்.

விலையுயர்வு

ஒருமுறை பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. ஜீவனுள்ள தேவனை நாடிச்செல்வது எத்தனை ஆசீர்வாதம்! இத்தனை தாழ்ச்சியான நிலையில் அவரை அறிந்து கொள்வது விலையேறப் பெற்றது! உருளைக்கிழங்கின் விலை உயர்ந்துவிட்டது. அரிசி விலையும் இரு மடங்காகிவிட்டது. ரொட்டி விலையும் கூட அதிகரித்துவிட்டது.

ஆனால் தேவனுடைய ஐசுவரி யம் பெரிதாயிருக்கிறது. எங்களுக்குச் செலவு அதிகம் என்பதை அவர் அறிவார். 150 மக்கள் போஷிக்கப்பட வேண்டும். எனது ஆத்துமா சமாதானமாயிருந்தது.

விலையுயர்வின் போது, "பார்வை அற்றுப்போகும் போது விசுவாசம் செயல்படுகிறது. கடினங்கள் பெருகும்போது விசுவாசம் எளிதாகிறது. வசதிகள் பெருகும்போது இருப்பதை விட குறைவுகள் வரும்போதுதான் விசு வாசம் வளருகிறது" என்று எழுதினார்.

"விலையுயர்வால் செலவுகள் அதிகமாயிற்று, கொடுக்கிறவர்களும் முன்பு போல கொடுக்க முடியவில்லை. ஆயினும் 'வெள்ளியும் பொன்னும் தேவனுடையவைகள்'. அவரில் விசு வாசம் வைத்து ஜெபித்தோம். அவர் கைவிடவில்லை. அவரை விசுவாசித்து அந்த நாட்களை எளிதாகக் கடந்து விட்டோம், அவரை விசுவாசிப்பதின் ஆசீர்வாதங்களை அனுபவிக்க முடிந்தது".

அன்பானவர்களே, உங்கள் நம்பிக்கையை அவர் மீது வையுங்கள். அது விலையேறப் பெற்றது.

- தொடரும்

வேதபுத்தகத்தைப் படிப்பது எப்படி?

How to read the Bible!

F.B.Meyer (1847-1929)

கிறிஸ்தவர்கள் வேத புத்தகத்தை படிப்பதை அடிப்படையாகக் கொண்டே அவர்களது கிறிஸ்தவ வாழ்வு முழுவதும் அமைகிறது. அனைத்து பிரசங்கங்களும், வேதபாட வகுப்புகளும், கிறிஸ்தவ பத்திரிகைகளும், புத்தகங்களும் நாம் அமைதியாக விலையேறப்பெற்ற வேத புத்தகத்தைப் படிப்பதற்கு ஈடாகாது.

கிருபையில் நாம் வளரும் அளவு, நமது தனிப்பட்ட வேத வாசிப்பினை அடிப்படையாகக் கொண்டது. ஜீவ அப்பமாகிய இதை உட்கொள்ள பசியின்மை ஏற்படுவது வாழ்வில் தவறு ஏற்பட்டிருப்பதை காண்பிக்கிறது.

1. வேத புத்தகத்தை படிப்பதற்கு ஒரு சமயத்தை ஒதுக்கவேண்டும்:

தெய்வீக ஆசிரியரான நமது தேவன் தம்மிடம் கற்றுக்கொள்ள விரும்புகிற மாணவர்கள் ஒரு குறிப் பிட்ட இடையூறில்லாத சமயத்தில் அவரை சந்திக்க விரும்புகிறார். அவருடைய வசனம் நமக்குப் புதிது புதிதான ஒளிமயமான சிந்தனைகளைத் தர வேண்டும். அதற்காக நாம் ஒரு நாளின் முதற்கனியாகிய அதிகாலை நேரத்தை அளிப்பது நன்று.

வேதத்தின் பகுதிகளைப் படிக் கும் போது கவனச் சிதறல்கள் கூடாது. இஸ்ரவேல் ஜனங்கள் மன்னாவை சேகரிக்க சூரியன் உதிக்குமுன் சென் றார்கள். வெயில் ஏற ஏற அது உருகிப் போகும். எனவே காலை உணவுக்கு சற்று முன் வேதம் வாசிப்பது நல்லது. நாம் கொடுக்கிற சமயம் நீண்டதாகத் தோன்றினாலும் நாளடைவில் குறை வாகவே தெரியும்.

நீங்கள் வாசிக்க வாசிக்க அதற் குரிய அதிக வாஞ்சையையும் பலனை யும் பெறுவீர்கள். கடமைக்காக வேக மாக வாசிப்பவர்கள் அதின் ஆழமான இனிய கருத்துக்களை ருசிக்க முடியாது.

2. தூய ஆவியானவர் போதிக்கும்படி அவரை நோக்குங்கள்:

வேதவசனங்களை எழுதிய தூய ஆவியானவர்தான் அதின் கருத்தை நமக்குப் போதிக்க முடியும். 'உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தரு ளும்' சங்.119:18 என்று ஜெபத்தோடு வாசியுங்கள். "கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்" 1 சாமு.3:9-10 என்று கூறி இருதயத்தை அவருக்கு நேராக ஏறெடுங்கள்.

3. வேதபுத்தகத்தை ஒழுங்காக வாசியுங்கள்:

ஒவ்வொரு ஆண்டும் ஒரு முறையாவது வேதத்தைப் படித்து முடிப்பது சாலச்சிறந்தது. பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியையும், புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு பகுதியை யும் படிக்கலாம். தினமும் ஒரு சங்கீதம் படிப்பது தனி தியானத்திற்கும், ஆராத னைக்கும் ஏற்றது. நீதிமொழிகளைப் படிப்பதால் அன்றாடகம் பிறரோடுள்ள ஐக்கியத்தை நல்லவிதமாகக் காத்துக் கொள்ள ஏதுவாயிருக்கும்.

4. கரத்தில் பென்னை வைத்துக் கொள்வது நன்று:

R. ஹாவெர்கல் என்பவரைக் குறித்து அவர்களது சகோதரி மேரி இப்படி குறிப்பிட்டுள்ளார்கள். "காலை யில் கோடை காலமாயிருந்தால் 7 மணிக்கும், குளிர்காலமாயிருந்தால் 8 மணிக்கும் வேதம் வாசிப்பது அவர்களது வழக்கம். மிகவும் குளிராயிருந்தால் கால்களை நெருப்புக்கருகில் சௌகரிய மாக வைத்து உட்காரச் சொல்லுவேன். அப்போது என்னைப் பார்த்து, மேரீ நான் வசனங்களுக்கு அடிக்கோடு போட

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

இந்தவிதமாய் உட்கார்ந்தால் சரி வராது என்பார்கள். வேதபுத்தகத்திலிருந்து அசாதாரணமானவைகளைத் தேடி கண்டுபிடிப்பார்கள். இரவு அதிகநேரம் தேவனோடு இவ்வாறு உறவு வைத்திருந் தார்கள். அதிகாலையில் எழுந்து வேத புத்தகத்தைப் படிப்பது வாழ்நாள் முழுவதும் அவர்கள் சட்டம்".

உங்கள் பாதையில் வெளிச்ச மாயிருந்த விசேஷித்த வசனங்களுக்கு அடிக்கோடிடுங்கள். ஒரே செய்தி மறுபடியும் மறுபடியும் வந்தாலும், புதிய கருத்துக்கள், உதவியான வசனங்கள் போன்றவற்றையும் குறித்துக் கொள் ளுங்கள். இக்குறிப்புகள் எதிர்கால பொக்கிஷமாயிருக்கும். நமது வேத புத்தகம் விலையேறப்பெற்ற நினைவுச் சின்னமாகவும், நமது உள்ளான வாழ்வின் சரித்திர புத்தகமாகவும் விளங்கும்.

5. சுயபரிசுத்தத்திற்காகப் படியுங்கள்

வேத புத்தகத்தை வேறு எந்த நோக்கத்தோடும் படிக்காமல் உங்களுக் காகவே படியுங்கள். அதன் ஒளிக்கதிர்கள் உங்கள் இருதயத்தில் குவியட்டும். நீங்கள் வாசிக்கிற பகுதி தேவன் உங்களுக்கு அருளும் செய்தியா யிருக்கட்டும். நம்மை திருப்திப்படுத்தும் தேவ கரம் உங்கள் அப்பத்தின் பங்கை தந்தாயிற்று என்ற உணர்வு ஏற்படும் வரை படியுங்கள். வாசிக்கும்போதே இப்பகுதியால் தூய ஆவியானவர் எனக்குப் போதிப்பதென்ன? என் வாழ்வில் ஏற்பட வேண்டிய மாற்றம் என்ன? என் வாழ்வில் இதை எப்படி செயல்படுத்துவது என்ற கேள்விகளைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

6. தொடர்ந்து ஜெபியுங்கள் :

வேதபுத்தகத்தின் ஆசீர்வாதங் களை ஜெபத்தின் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள். "உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன், நாள் முழுதும் அது என் தியானம்" சங்.119:97 என்று சங்கீதக்காரனோடு சொல்வோமா!

வேத புத்தகத்தை வேறு எந்த நோக்கத்தோடும் படிக்காமல், உங்களுக்காகவே படியுங்கள். அதன் ஒளிக்கதிர்கள் உங்கள் இருதயத்தில் குவியட்டும். நீங்கள் வாசிக்கிற பகுதி தேவன் உங்களுக்கு அருளும் செய்தியாயிருக்கட்டும்.

(2-ம் பக்க தொடர்ச்சி)

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, இது போன்ற **அநேக தேவ பிள்ளைகளுடைய** மாத காணிக்கையினா லேயே, மாதம் தவறாமல் வருகையின் தூதன் உங்கள் இல்லங்களுக்கு அனுப்பப் படுகிறது என்பதை **தேவ சமுகத்தில் சாட்சியாக அறிவிக்கிறேன்.**

"பின்னும் நான் சொல்லுகிற தென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்" 2 கொரி.9:6.

"என் குறைச்சலினால் நான் இப்படி சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண் டேன்" பிலிப்.4:11.

மிக முக்கிய அறிவிப்புகள்

1. **தவிர்க்க முடியாத காரணங்களால் ஏப்ரல், மேய் மாத பத்திரிகைகள் அச்சிட்டு அனுப்ப இயலவில்லை.**
2. **வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர் இந்தியன் வங்கிக்கு அனுப்பாமல் 2-ம் பக்கத்திலுள்ள United Bank of India வங்கிக்கு அனுப்பும்படி தயவாய் கேட்டுக் கொள்கிறேன். விபரம் அடுத்த மாத பத்திரிகையில் எழுதுவேன்.**
3. **காசோலை வழியாக காணிக்கை அனுப்பு வோர் (Cheque & Draft) 'வெஸ்லி தேவதாசன்' என்ற பெயருக்கு மட்டும் அனுப்பும்படி பட்சமாய் கேட்கிறேன்.**
4. **ஒவ்வொரு தடவையும் நீங்கள் காணிக்கை அனுப்பும் போதும் தயவாய் உங்கள் பதிவு எண், போன் நம்பரை கட்டாயம் எழுதுங்கள்.**
5. **வங்கி வழியாய் காணிக்கை அனுப்புவோர் தயவாய் உடனே எங்களுக்கு SMS அனுப்புங் கள், அல்லது அலுவலக போன் நம்பர் 95432 21008 வழியாக தெரிவியுங்கள். உங்கள் பெயரில் வரவு வைக்க அது அத்தியாவசியம் ஆகும்.**

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

உதவி : 9489740295
அலுவலகம் : 9543221008

இரட்சிப்பின் மிக முக்கிய நிருபணம் கீழ்படிதல்

Obedience - Chief proof of salvation

Joseph E. Harris

தேவனுக்குக் கீழ்படிவது வாழ் நாள் முழுவதும் முக்கியமானது. அது மிகவும் சரியானதுமாயிருக்கிறது. தேவன் நம்மை உண்டு பண்ணினவர். அவர் அன்பும் ஞானமும் நிறைந்தவர் . அவரது கற்பனைகள் நியாமற்றவை களும் கடினமானவைகளுமல்ல. அவை நமது நன்மையை நாடும் அன்புள்ள பரம பிதாவினால் கொடுக்கப்பட்டவை. அவருக்குக் கீழ்படிவது நியாயமானது.

தேவனுக்குக் கீழ்படியாம லிருப்பது பாவங்களில் மிகப் பெரிய பாவம். அது சுயவிக்கிரகாராதனை. தேவ கட்டளையை உதாசீனம் செய்வது நமக்கு நன்மையானதை தேவன் அறிவதை விட நாம் அதிகமாக அறிவோம் என்று காட்டுகிறது. இவ்வாறு நம்மை தேவனைவிட பெரியவர்களாகவும், நல்லவர்களாக வும், ஞானமுள்ளவர்களாகவும் காண்பிக் கிறோம். நாமல்ல அவரே நம்மை உண்டாக்கினவர். எனவே அவருக்குக் கீழ்படிவது சரியானது.

கீழ்படிதல் பல தீமைகளி லிருந்து நம்மை விடுவித்து நன்மைகளை கொண்டு வருகிறது. ஆனால் கீழ்படி யாமை நமக்குத் தீமை செய்து நம்மை அழிக்கிறது.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுக்குக் கீழ்படிவது மிக முக்கியம். ஏனெனில் இதுவே உத்தம இரட்சிப் பின் அனுபவத்திற்கான நிருபணம். அவருக்குக் கீழ்படியாமல் அவரை கர்த்தாவே கர்த்தாவே என்று அழைப் பதில் எந்த பயனுமில்லை. 'நீங்கள் என் சிநேகிதர்' என்கிறார். 'நான் கட்டளை யிடுகிறவைகளை செய்யும்போதும்.' யோவா. 15:14. கீழ்படியாத வாழ்வு சுயவிக்கிரகாராதனையாயிருப்பது போல் கீழ்படிதலின் வாழ்வு நாம் உண்மையாக கர்த்தரை ஆராதித்து வணங்குகிறோம் என்பதற்கு அடை யாளமாயிருக்கிறது.

தேவ கட்டளையை உதாசீனம் செய்வது, நமக்கு நன்மையானதை தேவன் அறிவதை விட, நாம் அதிகமாக அறிவோம் என்று காட்டு கிறது. இவ்வாறு நம்மை, தேவனைவிட பெரியவர்களாகவும், நல்லவர்களாகவும், ஞானமுள்ளவர்களாகவும் காண்பிக்கிறோம்.

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

Book Packets contains periodicals

To

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason